## அறிவுறுத்தல் பத்திரம்

## கல்வி நடவடிக்கைகளுக்காக பிரிவெனாக்கள் மற்றும் சீலமாதா கல்வி நிறுவனங்களில் தரம் 02 முதல் பிரிவெனா தரம் 13/ பிராச்சீன பண்டிதர் பரீட்சை வரை கல்வி பயிலும் மாணவ பிக்குமார்கள் / சீலமாதாக்கள் / மாணவ / மாணவிகளுக்கு சனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் - 2024/ 2025

### தகைமைகள்

- பிரிவெனா தரம் 02 முதல் தரம் 13/ பிராச்சீன பண்டிதர் பரீட்சை வரை கல்வி பயிலும் தரங்களில் 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதித் தவணைப் பரீட்சையின் பிரகாரம் 01-20 வரை இடங்களைப் பெற்றுக்கொள்ளல்.

  **கவனிக்க** :- 2024 ஆம் ஆண்டு தரம் 1 இல் அனுமதிக்கப்பட்ட மாணவ பிக்குமார்கள் / சீலமாதாக்கள் / மாணவ/ மாணவிகளுக்கு மற்றும் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற 2023 க.பொ.த (சா.த) பரீட்சை மற்றும் 2023 பிராச்சீன ஆரம்ப பரீட்சைக்கு தோற்றிய மாணவ பிக்குமார்கள் / சீலமாதாக்கள் / மாணவ/ மாணவிகளுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியாது.
- அரச அங்கீகாரம் பெற்ற பிரிவெனா மற்றும் சீலமாதா கல்வி நிறுவனம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவ பிக்குமார்கள் / சீலமாதாக்கள் / மாணவ/ மாணவியாக இருத்தல்.
- மாணவர்/ மாணவியின் குடும்ப மாதாந்த வருமானம் 100,000/= ரூபாவிற்கு மேற்படாதிருத்தல்.

### விண்ணப்ப படிவத்தைப் பூர்த்தி செய்தல் மற்றும் ஒப்படைத்தல்

- விண்ணப்பத்தின் பகுதி I மற்றும் பகுதி II ஆகியவற்றின் இலக்கம் 01 முதல் 04 வரையான பகுதிகள் விண்ணப்பதாரியால் பூர்த்திசெய்யப்படல் வேண்டும் என்பதுடன் புள்ளி வழங்குதலும் மாணவ பிக்குமார்கள் / சீலமாதாக்கள் / மாணவ/ மாணவிகளால் மேற்கொள்ளப்படல் வேண்டும். உரிய புள்ளிகள் பிரிவெனா/ சீலமாதா கல்வி நிறுவனங்களின் தெரிவுக்குழு மூலம் பரீட்சிக்கப்பட்டு உறுதிசெய்யப்படல் வேண்டும்.
- அனைத்து சந்தர்ப்பங்களிலும் சரியான தகவல்களையே உள்ளடக்குதல் வேண்டும்.
- WhatsApp தகவல்களை அனுப்ப முடியுமான தொலைபேசி இலக்கம் ஒன்றைக் குறிப்பிடுதல் வேண்டும். உங்களிடம் அவ்வாறான தொலைபேசி இலக்கம் இல்லையாயின் குடும்பத்தின் நெருங்கிய உறவினர் ஒருவரின் / பிரிவெனா ஆசிரியர் ஒருவரின் / பரிவேனாதிபதி தேரரின் / நிறுவனத் தலைவர் தேரரின் தொலைபேசி இலக்கம் ஒன்றை அவர்களின் இணக்கப்பாட்டுடன் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

இல்லறவாசி மாணவர் / மாணவியின் குடும்பத்தின் வருமான நிலைமை தொடர்பாக தான் வசிக்கும் பிரதேசத்தின் கிராம அலுவலரின் சான்றுரை, பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் (வருமானச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை) **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை தனது பிரிவெனா/ சீலமாதா கல்வி நிறுவனத்தின் பரிவேனாதிபதி/ நிறுவனத் தலைவரிடம் மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.**

பரிவேனாதிபதி/ நிறுவனத் தலைவரால் தனது பிரிவெனாவுக்கு உயர்ந்தபட்ச புலமைப்பரிசில் பெறுநர்கள் தெரிவுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர் புலமைப்பரிசில் பெறுநரின் தாய்/தந்தை/பாதுகாவலருடன் கூட்டிணைந்த (இணைந்த கணக்கு) செயற்பாட்டு நிலையில் உள்ள கணக்கு ஒன்றை மக்கள் வங்கி, இலங்கை வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கி கிளையில் திறந்து அக்கணக்கு விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பக்கம் மற்றும் தாய்/தந்தை/பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டையின் தெளிவான நிழற்படப் பிரதியை பரிவேனாதிபதி/ நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அந்த நிழற்படப் பிரதிகள் பரிவேனாதிபதி/ நிறுவனத் தலைவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

**கவனிக்க**:- எவ்வாறாயினும் பரிவேனாதிபதி/ நிறுவனத் தலைவரால் புலமைப்பரிசில் பெறுநர் ஒருவராக தெரிவு செய்யப்படதாக அறிவிக்கப்படும் வரை இணைந்த கணக்கு ஒன்றை திறக்கத் தேவையில்லை.

- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பங்கள் சனாதிபதி அலுவலகத்தில் அல்லது சனாதிபதி நிதியத்தில் நேரடியாக ஒப்படைத்தல் அல்லது தபால் மூலம் அனுப்புதல் ஆகாது.

## 1. மாணவ பிக்குமார்கள் / சீலமாதாக்கள் / மாணவ/ மாணவிகளின் செயலாற்றுகை

1.1. மாணவ பிக்குமார்கள் / சீலமாதாக்கள் / மாணவ/ மாணவி 2023 (2024) ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதித் தவணைப் பரீட்சையில் பெற்றுக்கொண்டுள்ள நிலை

கவனிக்க:-

- பிரிவெனா/ சீலமாதா கல்வி நிறுவனத்தில் தரம் 02 முதல் தரம் 04 வரை, தரம் 06 முதல் தரம் 10 வரை கல்வி பயிலும் மாணவ பிக்குமார்கள் / சீலமாதாக்கள் / மாணவ/ மாணவிகளாக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| 01 ஆம் நிலை முதல் 03 ஆம் நிலை வரை | 70 புள்ளி |
| 04 ஆம் நிலை முதல் 06 ஆம் நிலை வரை | 65 புள்ளி |
| 07 ஆம் நிலை முதல் 10 ஆம் நிலை வரை | 60 புள்ளி |
| 11 ஆம் நிலை முதல் 15 ஆம் நிலை வரை | 55 புள்ளி |
| 16 ஆம் நிலை முதல் 20 ஆம் நிலை வரை | 50 புள்ளி |
| ( ஆகக்கூடிய புள்ளிகள் 70) | |

1.2. பிரிவெனா (சாதாரண தரம்) க.பொ.த(சாதாரண தரம்) பரீட்சைக்கு தோற்றி அதில் சித்தி பெற்று பிராச்சீன பரீட்சைக்கு தோற்றும் அல்லது க.பொ.த (உயர் தரம்) பரீட்சைக்கு தோற்றும் மாணவ பிக்குமார்கள் / சீலமாதாக்கள் மற்றும் இல்லறவாசி மாணவர் மாணவிகளுக்கு மாத்திரம்

| | | |
|---|---|---|
| விசேட சித்தி | (A) | 08 புள்ளி |
| அதி திறமைச் சித்தி | (B) | 06 புள்ளி |
| திறமைச் சித்தி | (C) | 04 புள்ளி |
| சாதாரண சித்தி | (S) | 02புள்ளி |

( ஆகக்கூடிய புள்ளிகள் 70)

(தொகுதிப் பாடங்கள் தொடர்பில் ஒரு பாடத்திற்கு 1 புள்ளி வீதம் ஆகக்கூடியது 2 பாடத்திற்கு இரண்டு புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்)

**02.இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

பிரிவெனா மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் பிரிவெனாக்களுக்கு இடையிலான மொழி மற்றும் இலக்கியப் (பிரிவெனாக்களுக்கு இடையிலான மாணவர் திறமைகளை மதிப்பிடல்) போட்டி/ விளையாட்டு சாதனைகள் (தனியாள் / குழு) இணைப்பாடவிதானம் (சங்கங்கள், கழகங்கள் போன்றன உள்ளடங்கிய) போன்றவை மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பான சாதனைகள்.

| | பிரிவெனா / சீலமாதா கல்வி நிறுவன மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|
| முதலாம் இடம் | 07 | 08 | 09 | 10 |
| இரண்டாம் இடம் | 05 | 06 | 07 | 08 |
| மூன்றாம் இடம் | 03 | 04 | 05 | 06 |

(ஆகக்கூடிய புள்ளிகள 10)

கவனிக்க :-

- ஓராண்டுக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படலுக்கு உட்பட்டு கிட்டிய 03 ஆண்டுகள் பற்றிக் கருத்திற் கொள்ளல் பொருத்தமாகும்.
- மேலே 2 இல் புலமைப்பரிசில் பெறுநர் ஒருவருக்கு ஒரே வகையான இணைப்பாடவிதானச் செயற்பாட்டுக்கு தேசிய, மாகாண, வலய மற்றும் பாடசாலை மட்டம் ஆகிய அனைத்திற்கும் 03 ஆண்டுகளுக்கான சாதனைகள் இருப்பின் புள்ளிகள்

வழங்கப்படும் போது ஆகக்கூடிய புள்ளி மட்டம் மாத்திரம் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

### 3. <u>மாணவர் தலைமைத்துவம் - அனைத்து தரங்களுக்காகவும்</u>

| | |
|---|---|
| பாடசாலையின் தலைமை மாணவர் தலைவர்/ உப மாணவர் தலைவர் | 15 புள்ளி |
| மாணவர் தலைவர் (கனிஷ்ட/ சிரேஷ்ட) | 12 புள்ளி |
| வகுப்புத் தலைவர் | 10 புள்ளி |

(ஆகக்கூடிய புள்ளிகள் 15)

**கவனிக்க:-** மேலே 03 இல் புள்ளி வழங்கும் போது ஆகக் கூடிய மட்டம் மாத்திரம் கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

### 4. <u>மாணவ பிக்குமார்கள் / சீலமாதாக்கள் / மாணவ/ மாணவிகள் அறநெறிப் பாடசாலைக் கல்வி பயிலுதல் / அறநெறிப் பாடசாலைக் கற்றல் கற்பித்தல் பணிகளை மேற்கொள்ளல்.</u>

**(அறநெறிப் பாடசாலையின் தலைமை ஆசிரியரால் வழங்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தும் கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)**

| | |
|---|---|
| அறநெறிப் பாடசாலைக் கல்வி கற்றல்.<br>(ஓராண்டுக்கு மேற்பட்ட காலம் அறநெறிக் கல்வி பெற்றுக்கொள்ளல் மற்றும் ஏற்கனவே அறநெறிப் பாடசாலை ஒன்றில் மாணவ மாணவியாக இருத்தல்) | 05 புள்ளி |
| அறநெறிப் பாடசாலையில் கற்றல் கற்பித்தல் பணிகளை மேற்கொள்ளல் | 05 புள்ளி |
| (ஆகக்கூடிய புள்ளிகள் 05) | |

### 5. <u>புள்ளிகளின் சாராம்சம்</u>

- மேலே 1 முதல் 4 வரை அனைத்து பகுதிகளுக்குமாக பெற்றுக்கொண்ட ஆகக்கூடிய புள்ளிகள் அதற்கு உரிய பகுதியில் பொழிப்பாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**உங்களுக்கு மேலும் தகவல்கள் அறிந்துகொள்வதற்குத் தேவை எனின், கீழே குறிப்பிடப்படும் மின்னஞ்சலுக்கு (Email) செய்தி ஒன்றை அனுப்பி அல்லது கீழே குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும்..**

**மின்னஞ்சல் (Email) :-** pfschol@presidentsoffice.lk

**011 -2 354 354 – நீடிப்பு எண் :- 4830/ 4835/ 4837**

**074 - 085 4527 (WhatsApp மூலம் அனுப்பப்படும் குறுஞ்செய்திகள் மாத்திரம்)**